"DINATHATHI"

PAGE NO : 07

DATE : 19. 06. 2021



### பல்கலைக்கழகத்தில்

# சிறப்பு கொரோனா சிகிச்சை மையம்

## கவர்னர் திறந்து வைத்தார்

காலாப்பட்டு, ஜூன்.19-

புதுவை பல்கலைக்கழகத்தில் சிறப்பு கொரோனா சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று நடந்தது. பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார். கவர்னரும், பல்கலைக்கழகத்தின் தலைமை காப்பாளருமான தமிழிசை சவுந்தரராஜன் கலந்துகொண்டு கொரோனா சிகிச்சை மையத்தை திறந்து வைத்தார்.

இந்த மையத்தில் ஆக்சிஜன் செறிவூட்டிகளுடன் 60 படுக்கைகள் அமைக்கப்பட்டு உள்ளது. இங்கு சின்னகாலாப்பட்டு, பெரியகாலாப்பட்டு, பிள்ளைச்சாவடியில் தொற்றால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் பல்கலைக்கழக அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விழாவில் ஆய்வுகள், கல்வி கண்டுபிடிப்பு மற்றும் கிராமப்புற புனரமைப்பு இயக்குனர் பாலகிருஷ்ணன், கலாசார மற்றும் கலாசார உறவுகள் இயக்குனர் ராஜீவ் ஜெயின், பல்கலைக்கழக பதிவாளர் டாக்டர் சித்ரா, எம்.எல்.ஏ.க்கள் கல்யாணசுந்தரம், ஜான்குமார், ரிச்சர்ட், சுகாதாரத்துறை செயலர் அருண் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

HINDU TAMIL

PAGE NO : 07

DATE : 19.06.2021

புதுச்சேரி பல்கலை. வளாகத்தில்

# கரோனா பாதுகாப்பு மையம் திறப்பு

■ புதுச்சேரி

புதுச்சேரி பல்கலைக்கழக வளாகத்தில் கரோனா பாதுகாப்பு மைய திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்து கொண்டு கரோனா பாதுகாப்பு மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், எம்எல்ஏக்கள் கல்யாணசுந்தரம், ஜான்குமார், ரிச்சர்ட்ஸ், சுகாதாரத்துறை செயலர் அருண் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் ஆளுநர் தமிழிசை பேசியதாவது:

புதுச்சேரியில் தற்போது நடைபெற்று வரும் தடுப்பூசித் திருவிழாவில், நேற்று 15,000 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளதாக அறிந்தேன். இதனை மேலும் அதிகப்படுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. மக்கள் இதனை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

முதல்வர் தன்னையே ஒரு முன்னுதா ரணமாக காண்பித்து, மக்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். புதுச்சேரி மாநிலத்தை முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற முயற்சியில் இணைந்து பணியாற்றிக் கொண்டு இருக்கிறோம்.

மூன்றாவது அலை குழந்தைகளை மட்டும் தாக்கும் என்பதில்லை. குழந்தைகளுக்கு இதுவரை தடுப்பூசி போடவில்லை. ஒருவேளை நோய்த்தொற்றால் குழந்தைகள் தாக்கப்பட்டால் அதற்கும் தயாராக இருக்கிறோம். போதிய அளவு மருந்து கையிருப்பில் இருக்கிறது.

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் காப்பீடு திட்டத்தை மிக விரைவில் புதுச்சேரியில் உள்ள அனைத்து வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கும் வழங்குவதற்கான முயற்சி நடைபெற்று வருகிறது.

பிரதமரின் காப்பீடு திட்டம் சிறந்த பாதுகாப்பை தருகிறது என்று கூறினார்.

தொடர்ந்து காலாப்பட்டு எம்.ஓ.எச்.பருக் மரைக்காயர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ஆயுஷ்மான் பாரத் அட்டை பதிவு மையத்தை ஆளுநர் தமிழிசை பார்வையிட்டார்.

இந்த திட்டத்தின் மூலம் இதுவரை பயனடையாதவர்கள் பற்றிய விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அங்கிருந்த மாணவிகளுடன் ஆளுநர் கலந்துரையாடினார். கரோனா காலத்தில் மதிய உணவுக்கு பதிலாக வழங்கப்படும் அரிசி மற்றும் பணம் தலா ரூ.1,620-ஐ மாணவிகளுக்கு வழங்கினார்.

இதற்கிடையே, புதுச்சேரியில் நடைபெறும் கரோனா தடுப்பூசி திருவிழாவை ஜூன் 20, 21 என மேலும் இரு தினங்களுக்கு நீட்டித்துள்ளதாக சுகாதாரத் துறை செயலர் தெரிவித்துள்ளார்.